**செய்தி வெளியீடு எண்: 045** **நாள்: 18.01.2020**

## வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை

## செய்தி வெளியீடு

இன்று 18.1.2020 அன்று புதுதில்லியில் பீகார் துணைமுதலமைச்சர் திரு சுசில் குமார் மோடி அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட அமைச்சர்களுக்கான குழு கூட்டத்தில் ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரியில் 2017 – 2018 ஆம் ஆண்டுக்கான தமிழகத்திற்கு சேரவேண்டிய வருவாய் பங்கீடு குறித்த ஆலோசணையில் மாண்புமிகு தமிழக மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D.ஜெயக்குமார் அவர்கள் காணொலி காட்சி மூலம் கலந்து கொண்டார்.

கோவாவில் நடைபெற்ற 37வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D.ஜெயக்குமார் அவர்கள் ஏற்கனவே வலியுறுத்தியிருந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரியில் 2017 – 2018 ஆம் ஆண்டுக்கான தமிழகத்திற்கு சேரவேண்டிய வருவாய் பங்கீட்டு தொகையை விரைந்து அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் இன்றைய கூட்டம் நடைபெறுவதை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

கோவா மாநாட்டில் வலியுறுத்தியவாறு தமிழகத்திற்கு வரவேண்டிய ரூ.4,073 கோடி தொகையை உடனடியாக விடுவிப்பதற்கான வழிமுறைகள் குறித்து இன்றைய கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இது தொடர்பாக மைய அரசு விரைந்து முடிவெடுத்து தமிழகத்திற்கு சேரவேண்டிய தொகையை அளிக்குமாறு வலியுறுத்தினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**